1969 செப்டம்பர் 13]

வந்து சந்தையில் விற்கிறார்கள். இந்த வியாபாரம் நடக்கிறது, ஆகவே, இனியாகிலும் இதுபற்றி ஆராய்ச்சி செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *இப்போதுள்ள தகவலின்படி ஆங்காங்கு சிற்சில கற்கள் கிடைக்கின்றன என்பதுதான். தொடர்ச்சியாக ஆராய்ந்து—மிக அதிக அளவில் கிடைக்கக்கூடும் என்று ஏற்பட்டால் அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.*

* 283. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether deposits of Barytes, mixed with Quartz occur over a wide area between Alangayam, and Andiappanur, Tirupathur taluk of North Arcot District?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *ஆம்.*

வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆலங்காயத்திற்கும் ஆண்டியப்பனூருக்கும் இடையேயுள்ள கீழ்க்கண்ட பகுதிகளில் படிகக்கல்லும் (**Quartz** *) பாரியக் கந்தகையும்* **(Barytes)** *கிடைப்பதாகத் தெரிய வந்துள்ளது.*

1. *நரசிங்கபுரம், காலாரப்பட்டி ஒதுக்கக் காட்டுப் பகுதி (சுப்ரமணியம் கோயில் பகுதி).*
2. *ஆண்டியப்பனூர்—லாலாப்பேட்டை பகுதி.*

THIRU K. VINAYAKAM : If such deposits of Barytes mixed with quartz occur in these towns, what steps have Government taken to exploit these deposits?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *நம்முடைய மாநில ஜியாலஜிகல் நிர்வாகமும், மத்திய உதவியுடன் கூடிய ஜியாலஜிகல் நிர்வாகமும் தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. அங்கு போதுமான அளவு அதிகமாகக் கிடைக்கக்கூடும் என்று தெரிந்தால் அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது முடிவு செய்யப்படும்.*

திரு. மு. ச. சிவசாமி : *இந்த ஆண்டியப்பனூர் பக்கத்திலே கிடைப்பதாகச் சொல்லப்படுகின்ற பாரிடஸில் எத்தனை சதவீதம் குவார்டஸ் கிடைக்கிறது என்று சொல்ல முடியுமா ?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *எத்தனை சதவீதம் என்ற தகவல் இல்லை.*

" Bartytes occur along with quartz in the ratio of 2 :7 " *என்ற தகவல் இருக்கிறது. இரண்டும் எந்த எந்த விகிதத்திலே கலந்து கிடைக்கின்றன என்ற தகவல்தான் இருக்கிறது.*

*** 284 வினா.—திரு. கே. போஜன் :** *மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீலகிரி மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய பாக்சைட்டின் அளவு எவ்வளவு ?

[1969 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டம் முழுவதும் கிடைக்கக்கூடிய பாக்ஸைட்டின் அளவு 3, 4 மில்லியன் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றரை மில்லியன் டன் பாக்ஸைட் 40 சதவீதத்திற்கும் குறைந்த அலுமினியம் கலந்த கீழ்த் தரத்தைச் சேர்ந்ததாக இருக்கின்றது. எஞ்சியது 45 சதவீதச் சராசரி அளவு அலுமினியம் கலந்த சிறந்த தரத்தைச் சேர்ந்த பாக்ஸைட் ஆகும்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, ஒரு அலுமினியம் தொழிற்சாலை நிறுவுவதற்கு குறைந்த பட்சம் எவ்வளவு பாக்சைட் தேவையாகும்? நீலகிரியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த எவ்வளவு தேவையென்ற விவரம் இல்லை. தேவைக்குப் போதுமான அளவுக்கு நமக்குக் கிடைக்கிறது. இன்னொரு தொழிற்சாலை இருந்தால் இலாபகரமாக இருக்கும் என்று தோன்றவில்லை.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : பாக்சைட் இல்லாமல் மற்ற கனிவளங்கள் நீலகிரி மாவட்டத்தில் இருப்பதாகக் குறிப்புகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றிய தகவல் இல்லை.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

* 285 **வினா.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் கைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கங்கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1,025 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் உள்ளன.

திரு. சோ. அழகர்சாமி : இப்பொழுது இந்தக் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் சமீப காலத்தில் நூலின் விலை 5 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதால், தேக்கம் ஏற்பட்டு இதன் காரணமாக நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காமல் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வருமானம் அதிகமாக வருகின்ற அளவுக்கும் அவர்களுக்கு வேலை பாதிப்பு ஏற்படாமலும் இருக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைத்தறி நெசவு நூலின் விலையேற்றத்தினால் அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது, வேலை இழப்பு ஏற்படுகிறது என்று அவர்கள் சொன்னார்களே தவிர அவற்றிற்கு என்ன பரிகாரம் என்று சொல்லியிருப்பார்